11

கொலை

லேசாகக் கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது சோமையா தாத்தாவுக்கு. வயிறு மட்டும் உறுமிய வண்ணம் இருந்திராவிட்டால், சுகமாகத் தூக்கம் வந்திருக்கும். உச்சிவெயிலானாலும் உக்கிரம் இல்லை. முன்யோசனையாக என்றோ வீட்டின் நடு முற்றத்தில் நட்டிருந்த வேப்பம் செடி இன்று நெகுநெகுவென்று கிளை பரப்பி கோவர்த்தன மலை மாதிரி குடையாய் விரிந்து சூட்டைத் தணிக்கிறது. அதன் நிழலில் சோமையா தாத்தாவின் கயிற்றுக் கட்டில் ஒரு நிரந்தர அம்சம். வீட்டின் பின்புறம் இருக்கும் காய்கறித் தோட்டத்தை மேற்பார்வை பார்க்கவோ, அல்லது களத்து மேட்டுக்கோ அவர் செல்லாத நேரத்தில் தாத்தாவை எப்பவும் அந்தக் கட்டிலில் பார்க்கலாம். சிம்மாசனம் என்கிற பாவனையை ஏற்படுத்தும். உண்மையிலேயே நிலமெல்லாம் அவர் பெயரில் இருக்கும் வரை அவர்தான் ராஜா. அவர் வைத்ததுதான் சட்டம். அங்கு உட்காருவது ரொம்பவும் சௌகரியம். அங்கிருந்து வீட்டில் நடக்கும் எல்லா வற்றையும் நோட்டம் விடலாம். தாத்தா அங்கு உட்கார்ந்திருக்கிறார் என்கிற பயத்தில் பெண்கள் பேசாமல் வேலையை கவனிப்பார்கள். பெண்கள் பேச உட்கார்ந்து விட்டால் வீடு எப்படி நடக்கும்?

கட்டிலில் தலை சாய்ந்த நிலையிலும் கண்ணசரக் கூடாது என்கிற வைராக்கியத்துடன் தாத்தா புரண்டு படுத்தார். சந்தைக்

கடையில் நுழைந்தது போல குழந்தைகள் போட்ட இரைச்சலிலும் சீராக கிர் கிர்ரென்ற பெண்கள் கேப்பை ஆட்டும் எந்திரத்தின் ஒலி நின்றிருந்தது துல்லியமாகத் தெரிந்தது. அவர் விடுக்கென்று எழுந்து உட்கார்ந்து "எலே, என்னடா சத்தம் போடறீங்க?" என்று அதட்டல் போட்டபடி எதிர்த்தாற்போல் இருந்த திண்ணையைப் பார்த்தார். எந்திரத்தின் முன் எதிரும் புதிருமாக ஒரு காலை நீட்டி அமர்ந்து இருந்த கோமதியும், நாகலட்சுமியும் தங்கள் பேச்சை நிறுத்தி அரைப்பதைத் தொடர்ந்தார்கள். அவருக்குச் சுள்ளென்று கோபம் வந்தது.

"வேலையைப் பார்க்காம என்ன வம்பு பேசிக்கிட்டிருக்கீங்க?"

அவர்கள் தங்களுக்குள் விழிக்கடையோரம் பார்த்துக் கொண்டு தலைகுனிந்தபடி மௌனமானார்கள். அடுத்த எந்திரத்தில் ஆட்டிக் கொண்டிருந்த மீனாட்சி, எதிரில் அமர்ந்திருந்த சரஸ்வதியிடம் "கொள்ளிக்கண்ணு கிழத்துக்கு" என்று முணுமுணுத்தாள்.

"எலே பசங்களா, இன்னிக்குப் பள்ளிக்கூடம் இல்லையா?"

"போயிட்டு வந்துட்டம் தாத்தா."

சில குழந்தைகள் பள்ளிச் சீருடையில் இருந்தது தெரிந்தது. எல்லாரும் 'பசங்களா' தான் அவருக்கு. எந்தக் குழந்தையின் பெயரும் நினைவில்லை. யாருடைய குழந்தை எது என்றும் தெரியாது. இத்தனைக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் பெயரிடுவது அவர்தான்.

"தாத்தா, ராஜுவுக்குக் குழந்தை பிறந்திருக்கு."

"எந்த ராஜு?"

"உங்க அண்ணன் பேரன், ஒரு பேரு சொல்லுங்க."

'நடராஜன்னு வை."

''அவன் முதல் குழந்தைக்கு அந்தப் பேருதான் தாத்தா. நீங்கதான் வெச்சீங்க.''

''சரிதான், அப்ப தியாகராஜன்னு வையுங்க.''

''அது சந்திரனுடைய மகன் பேரில்லே.''

''எந்த சந்திரன்?''

''சரி விடுங்க.''

அது வேண்டாம், இது வேண்டாம் என்று கடைசியில் ஒரு பெயர் அமையும். இந்தக் குளறுபடியில் அவருக்கு சுத்தமாக மறந்து போகும். ஆனால் வீட்டில் குழந்தை பிறந்தால் ரொம்ப சந்தோஷமாக இருக்கும். யாருக்குக் குழந்தை பிறந்தாலும் உடனடியாகத் துணியில் சுற்றப்பட்டு இந்த வேப்ப மரத்தடிக்குக் கொண்டு வருவார்கள். கட்டிலில் அமர்ந்திருக்கும் தாத்தாவின் கையில் வைப்பார்கள். பச்சை மண்ணாக ஒளிரும் அதைச் சில வினாடிகள் தாத்தா பரவசத்துடன் பார்ப்பார். ஆண் குழந்தை என்றால் இரட்டிப்பு சந்தோஷம். இடுப்பில் முடிந்து வைத்திருக்கும் சுருக்குப் பையிலிருந்து ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்து அதன் பிஞ்சுக் கையில் வைத்து ''ஆரோக்கியமா, அதிர்ஷ்டமா வளரணும்'' என்று ஆசீர்வதிப்பார். பெண் பிறந்தாலும் வருத்தமில்லை. ஆண் இருக்கிற அளவு பெண் வேணும், அப்பத்தான் வெளியிலேந்து பெண் எடுக்க வேண்டியது இல்லை. வெளியிலேந்து பெண் எடுத்தா ஆபத்து. வீட்டை ரெண்டாக்கிடுவா. தங்கப்பன் பெண்ஜாதி செஞ்ச மாதிரி. தங்கப்பன் தனியா போறேன்னு போயி என்ன உருப்பட்டான்? குழந்தைகள் வேணும் நிறைய, வீட்டுக்கு அதுதான் பலம். விழுது விழவிழ நிலத்திலே பதிஞ்சு தூணாய் ஆலமரத்துக்குப் பலம் சேர்க்கிறமாதிரி. சிவப்பு முக்கோணம் போட்ட ஆஸ்பத்திரி வண்டியை அவர் இந்த வீட்டுக்கு அருகில் அண்ட விட்டதில்லை. கையலகமே நிலமிருந்தாலும், களத்திலே இறங்கி வேலை செய்ய ஆள் வேணும். அன்று அப்படித்தான், குமரேசு தயங்கிக் கொண்டு சொன்னபோது பெரிய பூகம்பம் வெடித்தது.

''தாத்தா, நானும் என் பெண்ஜாதியும் ஆஸ்பத்திரிக்குப் போயிட்டு வர்றோம்.''

''ஏன், என்ன உடம்பு?''

''உடம்புக்கு ஒண்ணும் இல்லே. டாக்டர் கிட்டே போயி யோசனை கேக்லாம்னு.''

''எதுக்கு?''

''குழந்தைங்க நாலு இருக்கிறது போதும், இனிமே வேண்டாம்னுதான்.''

தாத்தாவுக்கு சுறுசுறுவென்று கோபம் வந்து மீசை துடித்தது.

''எலேய், நா இன்னும் உசிரோடத்தாண்டா இருக்கேன்! இதையெல்லாம் நீங்களா தீர்மானிக்க ஆரம்பிச்சுட்டிங்களா? குழந்தைகளைக் குறைச்சு நிலத்திலே வேலை செய்ய வெளியாளைக் கூப்பிடுவீங்களா?''

''நிலத்திலே வேலை செய்ய வேண்டிய அளவுக்குப் பெத்துப் போட்டாச்சு.''

அவர் குரல் வந்த திசையை நோக்கினார். அவருக்கு திக்கென்றது. எதிர்த்த திண்ணையில் குனிந்த தலைநிமிராமல் மாவாட்டிக் கொண்டிருந்த எவளோதான் சொல்லியிருக்க வேண்டும்.

''எவடா அப்படிச் சொன்னது?'' என்றார் குமரேசுவிடம்.

''விடுங்க தாத்தா!'' குமரேசு மழுப்பினான். ''கவர்மெண்டே தெருவுக்குத் தெரு முழக்குது. ஒண்ணு போதும். இரண்டுக்கு மேலே நிச்சயம் வேணாம்னு.''

''சோமாறிப் பசங்க ஆளுற கவர்மெண்ட் வேற எதைச் சொல்லும்?'' என்று தாத்தா கர்ஜித்தார். ''போர் - கிணறு வெட்டணும், பம்பு செட்டு போடணும் கடன் கொடுங்கன்னு நாம மனு போட்டதுக்

கெல்லாம் பதில் போடாம கம்முனு உட்கார்ந் திருக்கிற சுவருமெண்டு வேற எதைச் சொல்லும்? நா உதவ மாட்டேன்னு தெரியுமில்லே, ஏன் பெத்துக்கறேன்னுதான் கேக்கும். ஆஸ்பத்திரியும் வேணாம், ஒண்ணும் வேணாம். போங்க, உள்ளே வேலையைப் பார்க்க!''

குமரேசு தலையைக் குனிந்தபடி நிற்க, எதிர்த்த திண்ணையிலிருந்து யாரோ ஏதோ சொன்னது போல் இருந்தது.

''எவடீ அது முணுமுணுக்கறது?''

யாரும் வாயைத் திறக்காமல் தங்கள் காரியத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

பம்பரத்தைக் கயிற்றால் சுற்றியபடி ஒரு வாண்டு சொன்னது:

''பிள்ளையைப் பெத்துப் போடற மெஷினா நாங்கங்கறாங்க!''

அவனை நோக்கிக் கையை ஓங்கியபடி குமரேசு பாய்ந்தபோது பயல் சிரித்துக் கொண்டே ஓட்டமெடுத்தான்.

தாத்தாவுக்கு உடம்பு பூராவும் நடுங்கிற்று.

''இத்தனை துளுத்துப் போச்சா? யாரு சொன்னது அப்படி?''

கேழ்வரகை அரைத்துக் கொண்டிருந்த நாகலட்சுமி விருக்கென்று எழுந்தாள். எல்லோரும் கலவரத்துடன் பார்த்துக் கொண்டிருக்க திண்ணையில் இருந்து 'தம்'மென்று இறங்கி, தாத்தாவை தீர்க்கமாகப் பார்த்து....

''நாதான் சொன்னேன்'' என்றாள். அவள் முகம் சிவந்து உதடுகள் லேசாகத் துடித்தன. கீழே அமர்ந்து நான்கு மணி நேரமாக மாவு அரைத்துக் கொண்டிருந்ததால் கசங்கியிருந்த புடவை கணுக்காலுக்கு மேல் ஏறியிருந்தது. மார்பை போர்த்திய இடத்தில் ஒரு

பொத்தல் இருந்தது. முழங்கை வரையிலும் முகத்திலும், தலையிலும் மாவு வெள்ளைப்புகை படிந்தது போல் இருந்தது அமானுஷ்யமாய்த் தோன்றியது. சதைப் பிடிப்பில்லாத அந்த உடம்பையும் உக்கிரமமான அந்த முகத்தையும் தாத்தா சங்கடமும், திகைப்புமாகப் பார்த்தார். மகள் வயிற்றுப் பேத்தியானாலும் முகத்துக்கு எதிரில் நின்று பேசியதில்லை. ஆனால் இவள் எப்படிப்பட்ட உறவு என்பது முக்கியமில்லை.

''ஆடு, மாடு மாதிரி நாங்களும் பெத்துக்கிட்டே இருக்கணுமா? எங்களுக்கு ஓய்வு என்கிறதே வேண்டாமா?''

கப்சிப்பென்று சுற்றி எல்லாரும் நிற்பதைக் கண்டு தாத்தாவுக்கு எரிச்சல் ஏற்பட்டது. ''வர வர என்ன, வாய் அதிகமாப் போச்சு, பொம்பள குட்டிகளுக்கு? வெட்டிப் பேச்சு பேசிக்கிட்டு நிற்கற அளவுக்கு இங்கே நேரமிருக்கா? இன்னும் ஓய்வு கிடைச்சா வாசலைத் தாண்டி சினிமா பார்க்கப் போயிருவீங்க. ஆண்டவன் பெண்ணைப் படைச்சது சந்ததி பெருக்கத்தான். எலே, சோமாறிகளா.... இதை எல்லோரும் உங்க சம்சாரத்துக்கிட்டே தெளிவா சொல்லிப் போடுங்க. போங்க, எல்லோரும் வேலையைப் பார்த்துக்கிட்டு!''

எதிரில் ஒருத்தி மூச்சிறைக்க நிற்பதை லட்சியம் செய்யாமல் கட்டிலில் கிடந்த துண்டை உதறி வெற்று மார்பில் போட்டு தடியைத் தட்டியபடி,

''எலேய், யாராவது என்னோடு களந்து மேட்டுக்கு வாங்க!'' என்று நகர்ந்தபோது முற்றத்தில் இருந்த எல்லோரும் அவரவர் ஜோலியைப் பார்க்கச் சென்றதும் நாகலட்சுமி அவமானப்பட்டு, தோற்றுப் போனதுபோல் இறுகிய முகத்துடன் வந்து எந்திரத்தின் முன் அமர்ந்தாள்.

''ஓரோரு சமயம் எனக்கு எப்படி இருக்கு தெரியுமா? கிழத்தும் மென்னியைப் பிடிச்சித் திருகிடணும் போல இருக்கு.'' அரைத்துக் கொண்டிருந்தவர்கள் திடுக்கிடவில்லை. அது ஒரு தமாசுபோல

நமுட்டுச் சிரிப்பு சிரித்தார்கள். தங்கச்சி பாப்பாவைத் தூளியில் இட்டு ஆட்டிக் கொண்டிருந்த செல்லந்தான் திடுக்கிட்டாள். நாகலட்சுமியின் முகத்தில் இருந்த கோபம் அப்படிப்பட்டதாக இருந்தது.

''அது முடியல்லேன்னா செல்லத்தாயி மாதிரி முடிச்சுக்க வேண்டியதுதான்.'' இதற்கும் மற்றவர்கள் பேசாமல் இருந்தார்கள்; எதுவும் சொல்லத் தயங்கிய மாதிரி.

செல்லத்துக்கு அடிவயிறு சில்லிட்டுப் போனது. நாகலட்சுமி அத்தைக்கு இன்று என்ன ஆயிற்று என்று புரியவில்லை. சமீபத்தில் காய்ச்சல் வந்து படுத்திருந்தாள். அதிலிருந்து இப்படித்தான் எல்லோர் மேலும் எரிச்சல் வருகிறது. காய்ச்சல் கடுமையாக இருந்தபோது கம்பளிப் போர்வையை உதறிக் கொண்டு 'செல்லத்தாயி, என்னைக் கூப்பிடறா' என்று எழுந்து ஓடப் போனவளை நயினாவும் இன்னும் இரண்டு அத்தைகளும் பிடித்து இழுத்துப் படுக்க வைத்தார்கள். சூடம் கொளுத்தி கண்ணில் நீருடன் சாமிக்குப் பூஜை போட்டார்கள். தாத்தாவிடம் வந்து முறையிட்டார்கள்.

''காத்து கீத்து பட்டிருக்கும், கொத்து வேப்பிலையை கதவிலே செருகி வையுங்க'' என்றார். வேப்பமரத்தின் ஒரு கிளையையே ஒடித்துக்கொண்டுபோய் வைத்தார்கள். செல்லத்தாயி தூக்குப் போட்டுத் தொங்கிய அறையின் பூட்டிய கதவின் மேலும் கொத்தாகச் செருகினார்கள்.

செல்லத்தாயி ஏன் தூக்குப் போட்டுக் கொண்டாள் என்று செல்லத்துக்குத் தெரியாது. செல்லம் பிறந்த சில மாதங்களில் பனிரெண்டு வருஷங்களுக்குமுன் முடிந்த கதை. மூத்த செல்லத் தாயி தூக்குப் போட்டுக் கொண்டதும் இவள் பெயர் செல்லம் என்று ஆனது. செல்லத்தாயியின் பிசாசு சில சமயம் வருது என்று அத்தைமார்கள் சொல்வார்கள். அமாவாசை கருக்கிருட்டு நடுச்சாமத்தில் வேப்பமரத்தில் அமர்ந்து அழுவது கேட்கிறது என்பார்கள். வேப்பமரத்து கட்டிலில் ஆணி அடித்தாற் போல் அமர்ந்திருக்கும் தாத்தாவை அது

ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. தாத்தாவைக் கண்டு பிசாசுக்கும் பயமாக இருக்கும் என்று செல்லம் நினைத்துக் கொள்வாள். அதுவும் பெண் பிசாசு. உசிர் இருக்கும்போது இல்லாத தைரியம் செத்துப் போனவளுக்கா இருக்கும்?

பள்ளிச் சீருடையில் விளையாடும் குழந்தைகளைப் பார்த்து சோமையா தாத்தாவுக்கு திடீர் என்று நினைவுக்கு வந்தது.

சாப்பாட்டு நேரமில்லையோ இது?

''எலே, சாப்பிட்டாச்சா எல்லாரும்?''

''இல்லே தாத்தோவ்! இன்னும் சோறு ஆவல்லே!''

''இதென்னடா அக்கிரமம்! ஒண்ணரை மணி இருக்கும்போல! இன்னுமா ஆவல்லே? இந்தப் பொம்பளைங்க என்னதான் செய்யறாளுவ?''

கட்டில் ஓரமாக நிறுத்தியிருந்த கைத்தடியை எடுத்து ஊன்றி நின்றார். அவருடன் சேர்ந்து வயிறும் நிமிர்ந்து ஓலமிட்டது.

''ஏன் இன்னும் சமையல் ஆவல்லே?''

அந்த கர்ஜனையில் முற்றமே கப்சிப்பென்று ஒடுங்கிக் கொண்டது. கொஞ்ச நாட்களாக இப்படிப்பட்ட மௌனங்களுக்குப் பழக்கப்பட்டிருந்தாலும் ஒவ்வொரு முறையும் ஏற்படும் ஆத்திரம் இப்பவும் ஏற்பட்டது.

''வர வர கேள்வி முறையே இல்லாம போச்சு இந்த வீட்டிலே'' என்றபடி சமையல்கட்டை நோக்கி நடக்கும்போது, 'நா கண்ணை மூடின பிறகு என்ன ஆகப்போறது' என்ற கவலை ஏற்பட்டது. சமையலறைக்கு வெளியில் ராஜுவின் மனைவி ராசம்மா அமர்ந்து கீரையும், பருப்பும் கடைந்து கொண்டிருந்தாள். அடுப்புச் சூட்டில் அமர்ந்திருந்ததில் முகம் கன்னிப் போயிருந்தது.

''இன்னிக்கு உன் சமையலா? ஏன் இன்னும் ஆவல்லே?''

தாத்தாவின் பக்கமே திரும்பாமல், கடைவதை நிறுத்தாமல் ராசம்மா பதில் சொன்னாள்:

''இன்னிக்கு என் முறையில்லே, கமலக்காவுடைய முறை, அவுகளுக்கு ஒடம்பு சொகமில்லேன்று சொல்லி என்னெ தோட்டத் திலேந்து கூட்டியாந்தாங்க. நா வந்து பருப்பு வேகவெச்சு இருக்கிற படைக்கெல்லாம் சோறாக்க நேரம் ஆகாது?''

அவள் குரலிலிருந்த சலிப்பைக் கண்டு கொள்ளாமல் ''யாரது கமலக்கா, குமரேசுவுடைய சம்சாரமா?'' என்றார்.

''ஆமாம்.''

''என்ன உடம்பு?''

''வேறென்ன? தலைச்சுத்தல். வாந்தி....''

''கர்ப்பமா?''

ஆமாம் என்பது போல் தலையசைத்தாள் நிமிராமல்.

''இம்புட்டுத்தானே?'' என்றார் தாத்தா நிம்மதியுடன்.

''நேரமாயிட்டதுன்னா கூட ஒத்தாசைக்கு யாரையாவது கூப்பிடவேண்டியது தானே?''

''எல்லோருக்குந்தான் ஏதாச்சும் வேலை இருக்கு.''

''தூளியை ஆட்டிக்கிட்டு நிக்கறாளே செல்லம், அவளைக் கூப்பிடறது!''

''அவளுக்கெதுக்கு இப்பவே பிடிச்சு இந்த வேலை யெல்லாம்?''

''சமயத்துக்கு செஞ்சா என்ன குறைஞ்சா போகும்? பொண்ணா பொறந்தவதானே? வயசாவல்லே?''

''பன்னண்டுதான் தாத்தா.''

''என்ன பன்னண்டுதான்? என் பொண்ஜாதியை நா கட்டும் போது அவளுக்கு எட்டு வயசு. அப்பவே குழம்பும், சோறும் ஆக்கத் தெரியும். சாப்பாட்டுக்கு இன்னும் எத்தனை நேரம் ஆகும்?''

''இதோ ஆச்சு, போங்க.''

முற்றத்துக்குத் திரும்பியதும் ''செல்லம் செல்லம்'' என்றார் பலக்க.

சிட்டு போல் பறந்து வந்து எதிரில் நின்ற அந்தச் சிறுமியை அவர் நினைவில்லாமல் பார்த்தார். தாவணியை இடுப்பில் சுற்றி இழுத்துக் கட்டியிருந்தாள் பெரிய மனுஷிபோல. தாவணிக்குள் பிஞ்சு மார்புகள் கூர்ப்பாகத் தெரிந்தன. உள்ளுக்குள் ஏதோ குலுங்கிற்று.

''கையில் என்ன?''

''புஸ்தகம்'' என்று அவள் பிரித்துக் காட்டினாள்.

''ஏது?''

''தம்பிது. பாட புஸ்தகம்.''

''உனக்கெதுக்கு புள்ளே அது?''

''பார்க்கறேன். நல்லாயிருக்கு. அழகழகான படங்கள் இருக்கு. படிக்கணும் போல இருக்கு.''

''சரிசரி, வேண்டாத வெட்டி வேலையெல்லாம் செய்யாத. பொம்பளப் புள்ளையா லட்சணமா போ. சமையல் கட்டிலே ராசம்மாளுக்கு ஒத்தாசை செய்யி. தட்டு வெச்சு, தண்ணி எடுத்து வெச்சு....போ....''

செல்லம் தலையைக் குனிந்தபடி திண்ணைக்குத் திரும்பிய போது நாகலட்சுமி அவளைப் பார்த்து கேலியாகச் சிரித்தாள். செல்லத்துக்கு அவமானப்பட்டது போலிருந்தது. துக்கம் துருத்திக் கொண்டு கண்ணில் நீர் திரையிட்டது. 'அத்தை சொல்றாப்பலே

தாத்தாவுடைய மென்னியைத் திருகணும்.' புத்தகத்தைத் தம்பியின் பையில் திணித்து, சமையல்கட்டுக்குச் செல்லும்போது அலகை நீட்டி நீட்டி ஒய்யாரமாகத் தன் குஞ்சுகளுடன் ஊர்வலம் செல்வதுபோல வழியே மறித்த பெட்டைக் கோழியை ஆங்காரத்துடன் விரட்டினாள்.

''சூ - ! சூ! சனியன் போ!''

கெக்கிலி பிக்கலி என்று எல்லாம் சிதறிக் கொண்டு நகர்ந்தன.

சாப்பாட்டுக் கடை முடிந்தது. காட்டு வேலைக்குப் போயிருந்த மாமாக்கள், சிற்றப்பாக்கள் வந்து சாப்பிட்டாயிற்று. தோட்டத்தி லிருந்து மாமிகள் வந்து குளித்து சாப்பிட்டார்கள். கேப்பையும் கேழ்வரகும் சற்று நேரம் ஓய்வு எடுத்து அத்தைகள் சாப்பிட்டு வந்ததும் மீண்டும் இயங்க ஆரம்பித்தன.

உண்ட மயக்கத்தில் வீடு கம்மென்றிருந்தது. அத்தைகள் அசந்தபடியே எந்திரம் ஆட்டுவதுபோல இருந்தது. வேப்பமரத்துக் கட்டிலில் படுத்த தாத்தாவிடமிருந்து மெல்லிய குறட்டை ஒலி வந்தது. குழந்தைகள் எல்லாம் எங்கோ காணாமல் போயிருந்தன. தூளியில் இருந்த குழந்தை உறக்கத்தில் இருந்தது.

செல்லம் சமையல்கட்டைத் தாண்டி கொல்லை மூங்கில் தடுப்பைத் திறந்து அப்பால் இருந்த காய்கறித் தோட்டத்திற்குள் புகுந்தாள். கத்தரி, வெண்டை, தக்காளி எல்லாப் பாத்திகளையும் பாவாடை விளிம்பைத் தூக்கிப் பிடித்துத் தாண்டித் தாண்டி செல்லும் போது பட்டாம் பூச்சிகள் கூடப் பறந்தன. சிரிப்பு வந்தது. அவற்றை எம்பிப் பிடிக்கக் கையைத் தூக்கியபோது கால் சதக்கென்று ஈரப்பாத்தியில் பதிந்து, பாவாடை விளிம்பெல்லாம் சேறாயிற்று.

''உங்களாலே என்ன ஆச்சு பாருங்க.''

காய்கறித் தோட்டத்துக்கு அப்பால் வயற்காடு விரிந்திருந்தது. முதிர்ந்து நின்ற சோளக் கொண்டைகளில் குருவிகள் அமர்ந்து இருந்தன.

''நாங்க உழைக்கிறது, நீங்க திருடறதா? போங்க போங்க!'' என்று தாத்தாவின் பாணியில் விரட்டினாள்.

குருவிகள் விர்ரென்று மேலே பறந்தன. செல்லம் அண்ணாந்து பார்க்கையில் கண் சொடுக்குவதற்குள் வயலை ஒட்டிய அந்தச் சுவரைத் தாண்டிச் சென்று மறைந்தன.

'றெக்கை இருந்தா நல்லாயிருக்கும்' என்று செல்லம் நினைத்துக் கொண்டாள்.

'இந்தத் தாத்தாவை லட்சியம் செய்யாமல், போனது வந்தது தெரியாம போயிட்டு வந்துரலாம்.'

பச்சைப் பசேல் என்று இருந்த வயலின் மையத்தில் பம்பு செட்டுக்காக இருந்த மேட்டில் சறுக்கு மரத்தின் மீது ஏறுவது போல கிடுகிடுவென்று ஏறி நின்றதும், அந்தச் சுவருக்கு அப்பால் பள்ளிக் கூடம் தெரிந்தது. பெண்கள் பள்ளி, அவள் வயதொத்த பெண்கள், மஞ்சள் பாவாடையும் வெள்ளை தாவணியும் அணிந்து இரட்டைப் பின்னலில் மஞ்சள் ரிப்பன் கட்டி கையில் புத்தகம் ஏந்தி அவளுள் பிரமிப்பை ஏற்படுத்துவார்கள்.

''கிறிஸ்துவங்க நடத்தற பள்ளிக்கூடம் அது'' என்றார் நயினா.

''கிறிஸ்துவங்கன்னா?''

''அவங்க வேற ஜனம். கும்பிடறது வேற சாமி.''

''நயினா, நா போறேன் அந்தப் பள்ளிக்கூடத்துக்கு. பக்கத்திலேதான இருக்கு.''

''வேணாம் புள்ளே, தாத்தா ஒத்துக்கிடமாட்டாங்க.''

''ஏன்?''

''அவங்க படிக்கற வேதம் வேற. நமக்கு அதெல்லாம் வேணாம்பாரு.''

''அப்ப தம்பி படிக்கற இஸ்கோலுக்குப் போறேன்.''

''தாத்தா வேண்டாம்பாரு.''

''நீங்க சொல்லுங்க தாத்தாகிட்டே.''

அன்று தாத்தா போட்ட சத்தத்தில் ஆடு, மாடு, கோழி, குருவி எல்லாம் மூச்சற்றுப் போயின. வேப்பமரத்து இலைகள் அசைவற்று நின்றன.

''பொம்பளைக்கு எதுக்குடா படிப்பு? கேப்பையை ஆட்டற துக்கும் சமையல் செய்யறதுக்கும் எதுக்குப் படிப்பு?''

''ஏதோ ஆசைப்படுது. பெரியவளார வரைக்கும் படிக் கட்டுமே!''

''வேணாம். நமக்குக் கட்டுப்படியாகாது. ஏற்கனவே திமிர்பேச்சுக் கிளம்பியிருக்கு. படிப்பு வேற சேர்ந்தா அடங்கியிருக்க மாட்டாளுவ. வீட்டு கௌரதை போயிரும்.''

மேட்டிலிருந்த பள்ளிக்கூட மைதானம் தெரிந்தது. உயரக் கூடை போலிருந்த ஒன்றில் சில பெண்கள் கையில் பிடிகொள்ளாத பந்தைத் தூக்கிப் போட்டார்கள். செல்லத்தைவிட பெரிய பெண்கள் இந்த வீட்டு வாசலைத் தாண்டுவதில்லை. திருமணமானவர்களும் தோட்டத்தில் வேலை செய்யப் போவதோடு சரி. கல்யாணமாகாத பெண்கள் இந்த முற்றத்தைச் சுற்றியே தான் வளைய வரவேண்டும். அதாவது மற்ற வேலையிலிருந்து ஓய்வு கிடைக்கும் போது, தேர் திருவிழா என்று எப்பவாவது மற்ற குழந்தைகளுடன் செல்லம் போவதுண்டு. இப்பொழுது இரண்டு வருஷங்களாக அதுவும் நின்றுவிட்டது.

''அதெல்லாம் வேணாம்'' என்றார் தாத்தா.

''வருஷா வருஷம் எதுக்குப் போகணும்? அதை வாங்கு இதை வாங்குன்னு காசைக் கரியாக்கற வழிதான் இது. இங்கே ஒண்ணும் காசு கொட்டிக் கிடக்கல்லே.''

இது ஒரு கோட்டை. கோட்டைக்கு இருப்பதுபோல பெரிய கதவு. துத்தநாகத்தில் செய்து காவி நிற வர்ணம் அடித்த கதவு. அதற்கப்பால் இருக்கும் உலகம் வேறு. விசாலமானது. சிரிப்பும், வண்ணமும், சங்கீதமும் கொண்டது. ஆண் துணையில்லாமல் பெண்கள் தனியாக தைரியமாக நடப்பார்கள். கைப்பையிலிருந்து பணத்தை எடுத்து சாமான் வாங்குவார்கள். சினிமாக் கதாநாயகிகள் போல அழகாக உள்ளாடைகளோடு, புடவை ரவிக்கை அணிவார்கள்.

இதையெல்லாம் வீட்டுக்கு வந்து அத்தைகளிடமும், மாமி களிடமும் சொல்வாள். சந்தைக்கடையில் சின்ன பெட்டி போல ஒன்றில் சின்னத்திரை இருப்பதையும் அதில் சினிமாப்படம் தெரி வதையும், இப்பொழுதெல்லாம் எல்லார் வீடுகள்லேயும் அதை வாங்கி வைத்திருப்பதாக நயினா சொன்னதையும் அவள்தான் வந்து நாகலட்சுமி அத்தையிடம் சொன்னாள்.

''அதுக்கு டி.வின்னு பேரு'' என்று பெரிய மாமன் மகன் ராமு விளக்கினான். ''வீட்டிலே உட்கார்ந்தே சினிமா பார்க்கலாம்.''

''வீட்டிலே உட்காந்தேவா?'' அரைப்பதை நிறுத்தி சரஸ்வதி அத்தையும், கோமதி மதனியும் கண்களை அகல விரித்தார்கள்.

நாகலட்சுமி அத்தை அரைப்பதை நிறுத்தாமல் சூள் கொட்டினாள்.

''அடப்போங்கடி வேலையைப் பார்த்துக்கிட்டு.''

''எடேய், அதுக்கு எம்புட்டு விலைன்ன தெரியுமா?''

''ஆயிரத்து ஐநூறுக்கு மேல.''

''ஏ அப்பா, அம்புட்டா!''

''நாஞ் சொல்லல்லே, வேலையைப் பாருங்கன்னு?''

''ஏங்க்கா, எல்லோரும் இத்தனை ஒழைக்கிறோம். வீட்டுக் குள்ளே அடைஞ்சு கிடக்கோம். சினிமாவுக்குக் கூட்டிட்டுப்

போங்கன்னா கேகக்றோம்? ஒண்ணு வாங்கிப் போட்டா சாயங் காலமா உட்கார்ந்து பார்ப்போமில்லே?''

''நீ ஒரு கூறு கெட்டவ. வேப்பமரத்துக்கடியிலே உக்காந் திருக்கிற கிழத்தை மீறி ஒரு சல்லிக் காசு யாராச்சும் செலவழிக்க முடியுமா?''

சரஸ்வதி அத்தையும், கோமதி மதனியும் முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு அரைப்பதைத் தொடர்ந்தார்கள்.

''ஒடிப் போயிரலாம் போல இருக்கு!''

''எங்கே போவே?''

அதற்கு ஏதும் பதில் இல்லை என்பதுபோல் மௌனம் நிலவியது.

''டி.வி. வந்திட்டா போதும். எங்கேயும் ஓட வேண்டிய அவசியமில்லே.''

''எல்லாரும் அவங்கவங்க புருஷன்கிட்டே சொல்ல வேண்டி யது. எல்லா ஆம்பளைகளும் கும்பலாய் போயி தாத்தாக் கிட்டே சொன்னா காரியம் நடக்கும்.''

காரியம் நடக்கவில்லை. அதாவது தாத்தா வரை விஷயம் போகவில்லை. ஆம்புளைகளே அதற்கு ஒப்பவில்லை. நிலத்துக்கும், வீட்டுக்கும் வேண்டிய உபயோகமான பொருள் வாங்க மட்டுமே பணம் செலவு செய்ய முடியும். டி.வி.யைப் பார்த்துக் கொண்டு பெண் கள் உட்கார்ந்தால் வேலையில் கவனம் இருக்காது. நயினாவைப் பெத்த பாட்டியும் மற்ற பாட்டிகளும் கூட சேர்ந்து கொண்டார்கள். ''கெடந்து அலையறாளுவ எல்லாரும்.'' ''இப்படியெல்லாம் கேட்க தெகிரியம் எங்கிருந்து வருது?''

மஞ்சள் பாவாடையும், வெள்ளை தாவணியும் அணிந்த பெண்கள் பந்தை எம்பி எம்பிப் போட்டு கலீரென்று சிரித்தார்கள்.

டி.வி.கூட வேண்டாம் செல்லத்துக்கு. அந்தப் பள்ளிக்குப் போக முடிந்தால் போதும். தாத்தா மட்டும் இல்லையென்றால் நயினா சம்மதித்திருப்பார்.

''பணத்தையும், பெண்ணையும் பூட்டி வெக்கணும்'' என்றார் தாத்தா ஒருநாள் பொதுவாக. ''இல்லேன்னா ரெண்டும் கையை விட்டுப் போயிரும்.''

''தாத்தா எப்ப சாவாங்க?'' என்றாள் செல்லம் பலக்க. சோளக் கொண்டைகளில் குருவிகள் மேலே பறந்தன.

அவருக்கு சாவே கிடையாதா?

'இல்லே இல்லே' என்பதுபோல கிறீச்சிட்டன. நாகலட்சுமி அத்தை சொன்னது போல தாத்தாவின் மென்னியைத் திருகினால் தான் சாவு என்று தோன்றிற்று. 'இல்லேன்னா அந்த செல்லத்தாயி கதையை முடிச்சுக்கிட்ட மாதிரி முடிச்சுக்க வேண்டியதுதான். செல்லத்தாயி, ஏன் தூக்குப் போட்டுக்கிட்ட?'

பள்ளியில் மணி அடித்தது. வெள்ளையும், மஞ்சளுமாகப் பட்டாம்பூச்சிகள் மாதிரி பெண்கள் கட்டிடத்திலிருந்து வெளிப் பட்டார்கள். செல்லம் பறப்பதுபோலக் கைகளை உயரத்தூக்கினாள். அந்தக் கும்பலில் சங்கமித்துப் போனாள்.

''அடியோய், செல்லம்.... தங்கச்சிப் பாப்பா முழிச்சிக்கிட்டு அழுது; வந்து பாரு! உங்கம்மா கழனிக்குப் போயிருக்கா!''

''அழட்டும்!'' என்றாள் செல்லம் அசையாமல்.

* * * * *

தூக்கமும், விழிப்புமாக இருந்தது சோமையா தாத்தாவுக்கு. காற்றே இல்லாத புழுக்கமான இரவு. அமாவாசை முடிஞ்சு இரண்டு நாள் ஆனதாக நினைவு. கும்மிருட்டாக இருந்தது. முகத்துக்கு நேர்

மேலே கொசு வட்டம் நொய் என்று சுழன்றது. கழுத்து வரை மூடியிருந்த போர்வையை இழுத்து முகத்தை மூடிக் கொண்டார். கண்ணை மூடிய நிலையிலும், சின்ன சின்ன ஓசைகளுக்குப் பழகிப் போன செவிகள் விழிந்திருந்தன. வீட்டின் உள்பக்க மூலை களிலிருந்து வரும் கைக்குழந்தைகளின் அழுகுரல்கள். வளையல் ஓசைகள், தெரு நாய்க் குரைப்பு, மாட்டுத் தொழுவத்தில் நிற்கும் மாடுகளின் மூச்சும் சில இரவுகளில் துல்லியமாகக் கேட்கும். தூக்கம் வராத இரவுகளில் தடியைப் பிடித்தபடி நீள உலாவிவிட்டு வருவது உண்டு. எரு மண்ணின் வாசனையும், தொழுவத்து மாடுகளும், ஆடுகளும், குழந்தைகளின் அழுகுரலும், மனத்துக்குத் தெம்பையும், பலத்தையும் கொடுக்கும். இன்று தூக்கம் விட்டு விட்டு வந்தது. எழுந்தால் முழுசாக கலைந்து போகலாம்.

அழுகுரல் கேட்டது. தாத்தா சடக்கென்று உஷாரானார். முகத்திலிருந்து போர்வையை விலக்கிப் பார்த்தார். எங்கிருந்து வருகிறது என்று புரியவில்லை. வீட்டுக்குள்ளிருந்தா அல்லது வேப்ப மரத்திலிருந்தா? உடம்பு முழுவதும் குப்பென்று வியர்த்தது. ஒரு பெண் அழுவது போலிருந்தது. மரம் கருப்பு பூதம் கணக்காய் கம் மென்று நின்றது. நாயின் ஊளையாகவும் இருக்கலாம். சன்னமாக, கையாலாகாத்தனமான அடிபட்ட ஓலம் போல. கெட்ட கனா கண்டிருக்கும்-நாய் கனாக் காணக் கூடாதா என்ன?

தாத்தா ஒருக்களித்துப் படுத்துக் கொண்டார். கண்கள் விழித் திருந்தன. நிழலைப் போல இருந்தது வீடு, கரிய ராட்சதனின் நிழல். இந்த ராட்சதனைப் பகலில் சமாளிப்பது சுளுவானது. இருளில் அது பிடிக்கு அடங்காமல் நிற்பதுபோல அச்சுறுத்திற்று. எத்தனையோ ரகசியங்கள் அவர் பார்வைக்குப் படாமல் இந்த இருளில் ஜனிக் கின்றன. பிசாசாய் உலவுகின்றன. இந்தப் பிசாசுகளின் முதல் இலக்கு பெண்கள். அதன் பிடியில் சிக்கும் போதெல்லாம் பெண்கள் மாறிப் போகிறார்கள். 'ஆடு, மாடு மாதிரி பெத்துக்கிட்டே இருக்கணுமா?' தாத்தாவுக்கு சுறுசுறுவென்று கோபம் வந்தது. பெண் இப்படிப்

பேசுமா? பிசாசுதான் பேசுது. சந்தேகமில்லே. அந்த சின்னச் சிறுக்கி செல்லம் கூட இல்லே புதுசு புதுசா கேள்வி கேட்கறா! அதும் பேரு செல்லமா, செல்லத்தாயியா? செல்லத்தாயிதான் செல்லமா? திடீரென்று காற்று அடித்ததுபோல் உடம்பு சிலிர்த்தது. இருளில் நிழலாய்த் தெரிந்த வீட்டில் அவர் கண்களுக்கு நேராக இருந்த அந்தப் பூட்டிய அறையில்தான் 14 வயது செல்லத்தாயி தூக்குப் போட்டுக் கொண்டாள். அசட்டுப் பெண். எதற்கு தூக்குப் போட்டுக் கொண்டதோ.... கெட்டிக்காரப் பொண்ணு. ஆணாப் பொறந்திருந்தா பட்டப்படிப்பு படிச்சிருக்கலாம்னு பெருமை சொல்லுவான் அவளுடைய அப்பன். சிட்டுப்போல காட்டுலேயும், மேட்டிலேயும் துள்ளித் திரியும். சமைஞ்சதும் பெண்பிள்ளை வீட்டு வாசலைத் தாண்டலாமா? கூடாதுன்னதுக்குத்தான் கோவம். அதுக்காக சாவறதா? இப்ப வந்து வந்து அழுகுது.

இலைகள் அசைவதுபோல் இருந்தது. தாத்தா விருக்கென்று எழுந்தார். கரிய நிழலாய் யாரோ செல்வது போலிருந்தது. மீண்டும் வியர்த்தது. அடிவயிற்றில் லேசாக பீதிகவ்விற்று.

''யார்ரா அது?'' என்றபோது நாக்கு குழறிற்று. நிழல்கள் விரைந்தன. ''செல்லத்தாயி! போயிரு! படையல் வைக்கறேன் போயிரு!'' கால் துவண்டு உடம்பு முழுவதும் வியர்த்தது.

காலையில் கண் விழித்தபோது சுளீரென்று முகத்தில் வெயில் விழுந்திருந்தது.

தோட்டத்தைச் சுற்றிவிட்டு உச்சி வெயிலுக்கு வீடு திரும்பிய போதுதான், சரஸ்வதி மூச்சிரைக்க வந்து சொன்னாள்.

''கமலக்காவுக்கு உடம்பு சரியில்லே, டவுனு ஆஸ்பத்திரிக்கு இட்டுட்டுப் போணும்.''

''ஏன் என்ன உடம்பு?''

''ரத்தப் போக்கு, ஒரே காய்ச்சல். பினாத்தறாங்க.''

''கர்ப்பமா இருக்கான்னு நினைச்சேனே?''

''கர்ப்பம்தான், கலைஞ்சு போச்சில்லே?''

''எப்ப?''

''நேத்து ராத்திரி.''

முந்திய இரவு எதையோ பார்த்த நினைவு வந்து மீண்டும் உடம்பு சிலிர்த்தது.

''காத்துபட்டிருக்கும்.''

''இல்லே தாத்தா. உடனடியா ஆஸ்பத்திரிக்கு இட்டுட்டுப் போகணும்.''

''நா சொல்றேனில்லே? வேப்பிலையை செருகிவை. இன்னிக்கு செல்லத்தாயிக்குப் படையல் வைப்போம்.''

சரஸ்வதி அழ ஆரம்பித்தாள்.

''எதுக்குப் புள்ளே அழுவறே?''

''அக்காவுக்கு காத்துமில்லே ஒண்ணுமில்லே. உடனே ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப் போணும். வீட்டிலே ஆண்பிள்ளைங்க யாரும் இல்லை. எல்லோரும் வயக்காட்டுக்குப் போயிருக்காங்க. புள்ளைங்க பள்ளிக்கூடம் போயிருக்கு.''

''பின்னே என்ன செய்யச் சொல்றே?'' என்றார் எரிச்சலுடன். ''அவங்க திரும்பி வர்ற வரைக்கும் காத்திருங்க. சுக்குத் தண்ணி வெச்சுக் கொடுங்க. திடீர்னு அப்படி என்ன உடம்புக்கு வந்துரும்?''

சரஸ்வதி புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு அழுதாள்.

செல்லம் தங்கச்சிப் பாப்பாவைத் தூளியில் இட்டு தாலாட்டும் போது மாவு அரைத்துக் கொண்டிருந்த அத்தைகள், மதனிமார்கள்

முகத்தில் இன்று சுரத்தில்லை. பீதி தெரிந்தது. தங்களுக்குள் ஏதோ ரகசியம் பேசினார்கள். நடையில் அரவம் கேட்டு செல்லம் ஓடிச் சென்று பார்த்தாள். ராஜு மாமா வயற்காட்டிலிருந்து திரும்பி இருந்தார். திரும்பி ஓடி வந்து அத்தைகளிடம் சன்னக் குரலில் சொன்னாள்.

''ராஜு மாமா வந்திட்டாங்க!''

சடக்கென்று நாகலட்சுமியும், சரஸ்வதியும் புடவையில் படிந்திருந்த மாவைக்கூட உதறாமல் நடைக்குச் சென்றார்கள். கூடவே செல்லமும் வந்ததைக் கவனிக்காமல்.

''கமலக்காவை உடனே டவுனு ஆஸ்பத்திரிக்கு இட்டுட்டுப் போகணும்.''

''என்ன விஷயம்?''

நாகலட்சுமி அத்தைக்கு பீதியில் நாக்கு உலர்ந்து போயிற்று? ''நேத்து ராத்திரி கர்ப்பத்தைக் கலைக்க மருத்துவச்சியை ரகசியமா கூப்பிட்டிருக்கா. மருத்துவச்சி செஞ்சது எசகு பிசகாப் போச்சு.''

சரஸ்வதி மதனி அழ ஆரம்பித்தாள். ராஜு மாமாவின் முகத்தில் அதிர்ச்சி தெரிந்தது.

''ஏம்புள்ளே? இந்த வழிக்கெல்லாம் ஆரம்பிச்சிட்டீங்களா?''

''ஐயோ, இப்ப எதுவும் கேக்காதீங்க. கூட்டிட்டுப் போங்க. தாத்தாவுக்கு விவரம் தெரியவேணாம்.''

மாமா தாத்தாவிடம் பணம் வாங்கிக் கொண்டு வாடகை மோட்டார் பிடித்து வரும்போது பொழுது சாய்ந்து போனது. அதற்குள் கமலக்காவின் அலறலில் கூரை நடுங்கிற்று. கோழிகளும், குஞ்சுகளும் பேச்சு மூச்சில்லாமல் கிடந்தன. ஆடும், மாடும் சங்கடத்துடன் பால் கறக்க மறுத்தன.

''செல்லத்தாயிக்குப் படையல் போட்டுடுவம்'' என்று தாத்தா சொல்லிக் கொண்டிருந்தார். அத்தைகளும், மதனிகளும் ஏற்கனவே

சாவு நிகழ்ந்ததைப் போல அழுதுகொண்டிருந்தார்கள். அதனால் தானோ என்னவோ கமலக்காவின் செத்துப் போன உடம்பு ஆஸ்பத்திரியில் இருந்து நடு இரவில் திரும்பி வந்த போது அவர்களால் அழமுடியாமல் போயிற்று. மாறாக, நாகலட்சுமி அத்தையின் கண்களில் தீவிர வெறுப்பும், கோபமும் தெரிந்தது.

தங்கராசு மாமன்தான் தலையில் தலையில் அடித்துக் கொண்டு அழுதார். ''நாதான் பாவி. நாதான் பாவி.''

குழந்தைகள் எல்லாம் திகைத்துப் போய் தூக்கம் கண்ணைச் செருகியதும், மூலைக்கு மூலை சுருண்டு படுத்தன. செல்லத்துக்குத் தூக்கம் வரவில்லை. அத்தைகளின் பேச்சும், அழுகையும் விளங்கவில்லை. நேற்று காலை நன்றாக இருந்த கமலக்கா முகம் வெளுத்த பிரேதமாய் படுத்துக் கிடப்பது வயிற்றைக் கலக்கிற்று. முற்றத்தில் மங்கிய அகல் விளக்கின் ஒளியில் உட்கார்ந்திருப்பவர்கள் எல்லாம் குட்டிப் பிசாசுகளாக, நடு நாயகமாக அமர்ந்திருந்த தாத்தா பெரிய பிசாசாகத் தோன்றினார்கள். இந்தக் கும்பலில் மூச்சுத் திணறி தான் செல்லத்தாயி தூக்குப் போட்டுக் கொண்டிருக்கணும். கமலக்கா செத்திருக்கணும்.

* * * * *

சோமையா தாத்தாவுக்குத் தூக்கம் கண்ணைச் செருகிக் கொண்டு வந்தது. முற்றத்தில் உட்கார்ந்திருந்தவர்கள் எல்லாரும் உள்ளாற படுக்கப் போய் விட்டார்கள். தங்கராசுவின் புலம்பல் மட்டும் இடையிடையே கேட்டது. பிறகு அதுவும் நின்றது. இது மாதிரி சாவு இந்த வீட்டிலே நடந்ததில்லே. குறைபிரசவம் கூட ஆனதில்லை. இது ஏதோ காத்துப்பட்ட கோளாறுதான். சந்தேகமில்லே. முந்தாநா ராத்திரி நிழல் போல ஏதோ நகர்ந்ததைப் பார்த்ததுமே கப்புனு அடிவயிற்றை பயம் கவ்விக்கிட்டது. அதான் நாக்கிலே 'செல்லத் தாயி'ன்னு வந்தது. எப்பவோ படையல் போட்டிருக்கணும் - அசட்டையா இருந்தது தப்பு.

சம்பந்தமில்லாமல் தங்கப்பனின் நினைவு வந்தது. வாட்ட சாட்டமான காளை. அவனுக்கு ஏத்த மாதிரி வீட்டிலே உறவுப் பெண் கெடைக்காததாலே மதுரையிலேந்து பெண் எடுக்க வேண்டி வந்தது. ரெண்டு எழுத்து படிச்ச பொண்ணு. எல்லாத்துக்கும் கேள்வி கேட்கும். அது என்ன மாயம் செஞ்சுதோ, தங்கப்பன் ஒரு நாள், 'நாங்க தனியாப் போறோம்'னு கம்பம்போல வெறச்சு நின்னு சொன்னதும் தெகைச்சுப் போச்சு. 'எலே, இந்த தெகிரியம் எப்படியடா வந்தது?'ன்னு சத்தம் போட்டபோது அம்புட்டு பேரும் பேசாம நின்னதும் அவன் மட்டும் நிமிர்ந்து நிக்க அந்தப் பொண்ணு, ''இது சிறை - பிசாசு பிடிச்ச வூடு, இதைவிட்டு வெளியேறினாத்தான் எங்களுக்கு விமோசனம்''னதும் அவளைத் தொடர்ந்து தங்கப்பன் கதவுக்கு வெளியே சென்றதும் நினைவு வந்தது.

தங்கப்பனையும் அவன் பெண்ஜாதியையும் இன்னிவரை மன்னிக்க முடியல்லே. அவன் எப்படி இருக்கான், உருப்பட்டானா இல்லையான்னு தெரிஞ்சுக்கக்கூட ஆர்வமில்லே. பொம்பளப் பேச்சைக் கேட்ட எவன் உருப்பட்டான்? அவருடைய மனைவி சொர்ணத்தின் நினைவு வந்தது. மௌனமாக, தொழுவத்தில் நிற்கும் அந்தப் பசுவைப் போல இருப்பாள். ஒருநாள் எதிர்த்து வார்த்தை யாடினதில்லே. உண்மையில் அவள் என்றாவது ஏதாவது பேசினாளா என்று கூட நினைவில்லை. பத்துக் குழந்தைகளைப் பெத்துக் குடுத்தா கடமைன்னு நினைச்சு....

மெல்லிய வளையோசையும் ஆடை சலசலக்கும் சில்லென்ற காற்றும் துல்லியமாகச் செவிப்புலன்களில் பட்டும் தாத்தாவுக்கு அசதியில் கண்ணைத் திறக்க முடியாமல் செருகிற்று. கழுத்தில் ஏதோ பட்டது. பாரமாக நெருக்கிற்று உடம்பு விதிர்த்தது.

கனவா? நனவா? பீதியில் மூச்சுத் திணறிற்று.

''செல்லத்தாயி, விட்டுடு..... படையல் போடறேன்'' என்ற வார்த்தைகளை யாரோ அமுக்கினதுபோல இருந்தது. கண்களைத் திறந்து குரலெழுப்ப முயன்று தாத்தா தோற்றுப் போனார்.

காலையில் செல்லம் கண்விழித்தபோது, கமலக்காவுக்குச் சற்றுத் தள்ளி தாத்தாவையும் பாடையில் கிடத்தியிருந்தார்கள். சிறிதளவு முகம் மட்டும் தெரியும்படி வெள்ளைத் துணியில் சுற்றப்பட்டிருந்தார். அக்கம் பக்கத்து ஜனங்கள் திண்ணையில் அமர்ந்திருந்தார்கள்.

அத்தைகளும், மதனிகளும் தங்களுக்குள் கூடப் பேசாமல் தலையைக் குனிந்தபடி இருந்தார்கள்.

நயினாவைப் பெத்த பாட்டி யாரிடமோ சொல்லி அழுதாள்: ''படையல் வெக்கிறேன்ன புலம்பிக்கிட்டிருந்தாங்க.''

வாசலின் பெரிய துத்தநாகக் கதவு வெட்டு மல்லாக்காகத் திறந்திருந்தது.

இந்தியா டுடே இலக்கிய மலர் 1993